DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Principal Sessions Judge, Virudhunagar District at Srivilliputtur.

SPL.C.C.No. 1/2025

Deposition of witness for Prosecution/Defence/Court : P.W.14

Accused A2 present., A1 absent. Petition filed and allowed.

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.ஸ்ரீனிவாச பெருமாள் | Caste | : |
| Father's /Husband's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the 25th day of September, 2025.

முதல் விசாரணை

நான் தற்போது குடிமை பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வு துறை தென்மண்டல காவல் கண்காணிப்பாளராக பணியாற்றி வருகிறேன். நான் கடந்த 02.04.2018 ம் தேதி விருதுநகர் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணைக்கண்காணிப்பாளராக பணியாற்றியபோது விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை நகர், சொக்கலிங்கபுரம் பூலூர் சங்கரலிங்கன் தெருவைச் சேர்ந்த சோமசுந்தரம் என்பவர் அவரது உரிமையாளர் ஒப்பந்ததாரரான திரு.சுப்பாரெட்டியின் பெயரில் ரூ. 75 லட்சம் மதிப்பில் செய்து முடித்த அருப்புக்கோட்டை நகராட்சிக்கு உட்பட்ட நேதாஜி மயான சாலை அமைக்கும் ஒப்பந்தப்பணிக்கு பிடித்தம் செய்யப்பட்ட 5 சதவீத கூடுதல் காப்புத் தொகை ரூ. 3,74,765/– திரும்ப காசோலையாக வழங்குவதற்கு ரூ. 25,000/– பணத்தை அருப்புக்கோட்டை நகராட்சி பொறியாளர் (பொறுப்பு நகராட்சி ஆணையாளர்) திரு. முத்து மற்றும் அருப்புக்கோட்டை நகராட்சி அலுவலக கணக்கர் திரு. தியாகராஜன் லஞ்சமாக கேட்டதாக கொடுத்த புகார் மனு மீது அப்போது அலுவலகத்தில் பணியில் இருந்த விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆய்வாளர் திரு.பூமிநாதன் அவர்கள் உயர் அதிகாரிகளின் அனுமதி பெற்று விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 6/2018 ன்படி வழக்கு பதிவு

செய்து பொறி வைப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு ஆஜர் எதிரிகள் புகார் தாரர்களிடம் ரூ. 25,000/- ம் பணத்தை லஞ்சமாக கேட்டு பெற்றதாக கையும் களவுமாக பிடித்துள்ள விபரத்தை எனக்கு 02.04.2018 ம் தேதி அன்று மாலை சுமார் 4.45 மணிக்கு தெரிவித்து 1ம் எதிரி முத்து, பி குரூப் அலுவலர் என்பதால் கைது நடவடிக்கை மேற்கொள்ள என்னை அழைத்தார்.

நான் அருப்புக்கோட்டை நகராட்சி அலுவலகம் சென்று 1 ம் எதிரி மற்றும் ஆஜர் 2ம் எதிரிகளை விசாரித்து 1ம் எதிரியை கைதுக்கான காரணம் கூறி அன்று மாலை 6.00 மணிக்கும், 2ம் எதிரியை கைதுக்கான காரணம் கூறி அன்று மாலை சுமார் 6.15 மணிக்கும் கைது செய்தேன்.

பின்னர் சம்பவம் தொடர்பாக காவல் ஆய்வாளர் திரு.பூமிநாதன் மற்றும் அலுவல் சாட்சிகள் முன்னிலையில் தயார் செய்த கைப்பற்றுதல் மகஜரை பார்வையிட்டு எதிரிகளை கைது செய்ததற்காக கடைசி பக்கத்தில் கையொப்பம் செய்தேன்.

பின்னர் எதிரிகளின் வீட்டினை சோதனை செய்ய முன் தகவல் கடிதத்தினை கனம் திருவில்லிபுத்தூர் முதன்மை குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்துவிட்டு, முதலில் அருப்புக்கோட்டையில் உள்ள 2ம் எதிரியின் வீட்டினையும், பின்னர் திருவில்லிபுத்தூரில் உள்ள 1ம் எதிரியின் வீட்டையும் அலுவல் சாட்சிகள் முன்னிலையில் சோதனை செய்தேன்.

சோதனையின் போது எந்த விதமான பொருட்களையும் கைப்பற்றவில்லை. வீடு சோதனை செய்ததற்காக சோதனை ஜாபிதா மற்றும் சோதனை குறிப்புகளை தயார் செய்து கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். உயர் அதிகாரிகளின் உத்தரவின்படி இவ்வழக்கின் புலன்விசாரணையை ஆய்வாளர் திரு.பூமிநாதன் அவர்களிடமிருந்து பெற்று இவ்வழக்கினை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன்.

சம்பவ நாளன்று தயார் செய்யப்பட்டு சீல் வைக்கப்பட்டு கனம் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்ட கரைசல்கள் அடங்கிய பாட்டில்களை நீதிமன்றத்தின் மூலம் சென்னை தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பிவைத்தேன். எனது புலன்விசாரணையின் போது 04.04.2018 ம் தேதி அன்று திரு.சோமசுந்தரம், திரு.வனத்துரை, திரு. ஜஸ்டின் ஜெயக்குமார், திரு.சுப்பாரெட்டி ஆகியோர்களையும்,

17.04.2018 ம் தேதி திருமதி.ஜெகதீஸ்வரி, திருமதி.காளீஸ்வரி, திரு.கிருஷ்ணகுமார், திருமதி.சுமதி, திருமதி.மாலதி, திரு. முகமது உசேன், திரு.காளிமுத்து, திரு.தர்மலிங்கம் ஆகியோர்களையும், 19.04.2018 ம் தேதி காவல் ஆய்வாளர் திரு. பூமிநாதன் அவர்களையும் விசாரணை செய்து அவர்கள் சொன்னபடியே வாக்குமூலம் பதிவு செய்தேன்.

எனக்கு கூடுதல் காவல் கண்காணிப்பாளராக பதவி உயர்வு ஆணை வந்ததால் வழக்கு கோப்பினை மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் திரு.பாண்டியராஜன் அவர்களிடம் 25.04.2018 ம் தேதி அன்று வழக்கு கோப்பினை ஒப்படைத்தேன்.

இவ்வழக்கு சம்பந்தமாக அப்போதைய விருதுநகர் லஞ்ச ஒழிப்பு துறை காவல் துணைக்கண்காணிப்பாளர் திரு.ரகுபதி அவர்கள் என்னை 13.07.2018 ம் தேதி அன்று விசாரணை செய்தார்.

<u>1 ம் எதிரி தரப்பு குறுக்குவிசாரணை</u>

அசா 13 பூமிநாதன் என்பவர் பொறி வைத்து பிடிக்கும் நடவடிக்கை முடிந்த பிறகு எனக்கு எந்த தகவலும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் 1ம் எதிரியை மாலை 4.45 மணிக்கு கைது செய்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. அதன் பின்தொடர்ச்சியாக மாலை 6.15 மணிக்கு 2ம் எதிரியை கைது செய்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. கைப்பற்றுதல் மகஜரில் நான் சொன்னது போல் சொன்ன நேரத்தில் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரியல்ல. 1ம் எதிரி மற்றும் 2ம் எதரிகளை நீதிமன்ற காவலுக்கு சொன்ன விதத்தில் உட்படுத்தவில்லை என்றால் சரியல்ல. 1 மற்றும் 2ம் எதிரிகளின் வீடுகளை நான் சொன்னதுபோல் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் சோதனை எதுவும் செய்யவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கில் கரைசல்கள் அடங்கிய பாட்டில்களை காலதாமதமாக ஆய்வகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டது என்றால் சரியல்ல. சாட்சிகளை நான் சொன்னது போல் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. கைது நடவடிக்கையின்போது உரிய நடைமுறைகள் பின்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. புலன்விசாரணை எனக்கு மாற்றி காவல் கண்காணிப்பாளரால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்படவில்லை என்றால் சரியல்ல. 1ம் எதிரியை நான் கைது

செய்தபிறகு மீண்டும் அசா 13 யிடம் புலன்விசாரணைக்காக ஒப்படைக்க சட்டவிதிகளில் இடமில்லை என்றால் சரியல்ல. கைது நடவடிக்கைக்கு பிறகு தயாரிக்கப்பட்ட கைது அட்டை, கைது குறிப்பாணை மற்றும் ரிமாண்ட் ரிப்போர்ட் ஆகியவற்றை இவ்வழக்கில் குறிப்பிட்டுள்ள கால அட்டவணைக்குள் தயார் செய்ய இயலாது என்றால் சரியல்ல. அருப்புக்கோட்டை நகராட்சியில் சிசிடிவி வழக்கு பதிவு செய்யப்படுவதற்கு முன்பாக அமைக்கப்பட்டிருந்ததா என்பது குறித்து நான் விசாரித்தேனா என்றால் நான் அதுபற்றி விசாரிக்கவில்லை. அசா 13 மேற்படி சிசிடிவி அமைப்புகளை விதிகளுக்கு புறம்பாக அகற்றிவிட்டார் என்றாலும் அந்த விபரம் எனக்குத் தெரியும் என்றாலும் வழக்கிற்காக மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

இந்த வழக்கின் ஒப்பந்தக்காரர் சோமசுந்தரம் என்பவருக்கு ஒப்பந்த பணி சம்பந்தமாக அசாஆ 16 ஆவணத்தை எனது விசாரணையின் போது பார்வையிட்டேனா என்றால் பார்வையிட்டேன். மேற்படி ஆவணத்தில் அசா 2 சோமசுந்தரம் என்பவர் அசா 12 சுப்பாரெட்டியார் என்பவரிடம் பணிபுரிந்தார் என்பதை காட்டுவதற்கு எந்த ஆவணங்களும் இல்லை என்றால் சரிதான். அசா 12 சுப்பாரெட்டியாரிடம் அசா 2 சோமசுந்தரம் பணிபுரியவில்லை என்றால் சரியல்ல.

அசாஆ 16 கோப்பு சம்பந்தமான காப்புத்தொகையை திரும்ப வழங்குவது சம்பந்தமாக விதிமுறைகளை நான் கைப்பற்றி நீதிமன்றத்திற்கு அனுப்பவில்லை என்றால் சரியல்ல. நான் விசாரித்த சாட்சிகள் யாரும் காப்புத்தொகை திரும்ப வழங்குவது சம்பந்தமான நடைமுறைகளை தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. காப்புத்தொகை திரும்ப வழங்குவது சம்பந்தமாக சம்பவ காலத்தில் நகராட்சியின் நிதிநிலைமை பற்றி நான் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. அசா 12 கொடுத்த மனுவிற்கு முன்பாக வேறு ஒப்பந்தக்காரர்கள் கொடுத்த மனுவின்பேரில் காப்புத்தொகை வழங்கப்பட்டுள்ளதா என்பது குறித்து நான் விசாரித்தேனா என்றால் விசாரித்தேன். தற்சமயம் ஞாபகம் இல்லை. அசா 12 கொடுத்த மனுவானது உரிய நிதிப்பட்டியலில் மூப்பு வரிசையில் பதிவு செய்யப்பட்டு இருந்ததா என்றால் பதிவு செய்யப்பட்டிருந்தது. மூப்பு வரிசைப்படி ஒப்பந்தக்காரர்களுக்கு காப்புத்தொகை சரியாக வழங்கப்பட்டு வந்தது என்றால் சரிதான்.

அசா 12 க்கு இந்த வழக்கு சம்பந்தமான காப்புத்தொகை வழக்கு நடவடிக்கைக்கு பிறகு எப்போது வழங்கப்பட்டது என்பது குறித்து விசாரித்தேனா என்றால் நான் பணிமாறுதலில் சென்றுவிட்டபடியால் கோப்பினை அடுத்த புலன்விசாரணை அதிகாரியிடம் ஒப்படைத்துவிட்டேன். எங்கள் துறை கொடுத்த அழுத்தத்தின் காரணமாக மூப்பு வரிசை பட்டியலில் பின்னிட்டு இருந்த அசா12 க்கு விதிகளுக்கு புறம்பாக இந்த வழக்கு நடவடிக்கைகளுக்கு காரணமாக்கி காப்புத்தொகை திரும்ப செலுத்தப்பட்டது என்றால் சரியல்ல. அசா 2 மற்றும் அசா 13 ஆகியோர்களின் வாக்குமூலங்களை மட்டுமே வைத்து ஒரு தலைபட்சமாக விசாரணை செய்தேன் என்றால் சரியல்ல.

**2 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –**

1 ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை 2 ம் எதிரி தரப்பு வழக்கறிஞரால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

மறுவிசாரணை – இல்லை.

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

Principal District and Sessions Judge,
Virudhunagar District at
Srivilliputtur.